# திருப்பூர் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: திரு.ச.மணிமுத்து, எம்.காம்., எச்.டி.சி.எம்.,
உதவி இயக்குநர்

ந.க.2470/2020/ஏ

நாள்.09.09.2021.

பொருள் நிர்வாகம் – கைத்தறி மற்றும் துணிநூல்– 2018–2019 மற்றும் 2019 –2020 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கலந்தாய்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 2380/PSD-I/2020, நாள் : 30.05.2020.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க எண்.14680/2020/இ2-10, நாள்:14.08.2020.
3. கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க எண்.2470/2020/ஏ, நாள் :20.08.2020.
4. முதன்மை செயலர்/ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சென்னை அவர்களின் விரைவுக்குறிப்பாணை ந.க எண். 14680/2020/இ2-2, நாள்: 28.08.2021.

....

**ஆணை**

பார்வை (1) இல் காணும் செயல்முறைகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்திய 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான தொகுதி – IVக்குட்பட்ட நேரடி நியமன தேர்வின் மூலம் தேர்தெடுக்கப்பட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு திருப்பூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள் இளநிலை உதவியாளர் பார்வை (3) இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி திருப்பூர் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கீழ்கண்ட விபரப்படி இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ. எண் | பெயர் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. ப. கோகிலா | 20.08.2020 மு.ப | 20.08.2020 மு.ப |

பார்வை (4) இல் காணும் முதன்மை செயலர்/ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணையின்படி, மேற்படி தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இத்தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவமானது தனியார் பணியில் சேர்ந்த நாள் முதல் துவங்குகிறது என ஆணை வழங்கப்படுகிறது. தனியர்கள் தகுதிகாண் பருவ காலமாகிய இரண்டாண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை மற்றும் சார்நிலை அலுவர்களுக்கான கணக்குத் தாள்– பாகம் 1 ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

உதவி இயக்குநர்
கைத்தறி மற்றும் துணிநூல் துறை,
திருப்பூர்.

பெறுநர்

திருமதி. ப. கோகிலா,
இளநிலை உதவியாளர்.

நகல்

1. முதன்மை செயலர்/ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளரது பணிப்பதிவேடு..
3. இருப்புக் கோப்பு